Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2004 PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

**Tuesday 19 October: 2 p.m. Eastern Standard Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 50 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You may not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be used.*

## Section 1: Listening and Responding (30 marks) Click here

**Instructions to Students**

1. Allow approximately 50 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2004*

**Part A** (Questions 1–3)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

| | Marks | You may make notes in this space. |
|---|---|---|
| **Text 1** Click here | | |
| 1. What are these two people discussing? | 3 | |
| _______________ | | |
| _______________ | | |
| _______________ | | |
| **Text 2** Click here | | |
| 2. (a) What kind of relationship do the students and teacher have? Provide two pieces of evidence from the text. | 3 | |
| _______________ | | |
| • _______________ | | |
| • _______________ | | |
| (b) What information has to be provided to the principal by the students? | 3 | |
| • _______________ | | |
| • _______________ | | |
| • _______________ | | |

Marks | You may make notes in this space.

**Text 3** Click here

3. (a) What makes Sathasivam think he has seen Nalini before? Give your answer in full sentences. **2**

___

___

___

(b) Indicate the reason for not establishing the centre in Jaffna by ticking the appropriate box. **1**

(A) Jaffna is not good environmentally. ☐

(B) There are no facilities for importing and exporting in Jaffna. ☐

(C) The unemployment in Trincomalee is high. ☐

(D) The sale of dresses in Trincomalee is remarkable. ☐

(c) Give two special aspects of this centre. **2**

- ___
- ___

(d) How does Sathasivam feel about Nalini's project? Justify your response by making two references to the text. **3**

___

- ___

  ___

- ___

  ___

(e) What benefits are there for the country in setting up this centre? **3**

- ___
- ___
- ___

**Part B** (Questions 4–5)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information;*
- *convey the information accurately and appropriately.*

---

You will hear TWO texts, one relating to Question 4 and one relating to Question 5. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks** | You may make notes in this space.

**Text 4** Click here

4. (a) What difficulties did Peter face in solving the problem? **2**

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பீற்றர் பட்ட துன்பங்கள் யாவை?

(b) Discuss the moral or purpose of this story. **2**

இக்கதை வழங்கும் நீதியை அல்லது இக்கதை கூறப்படுவதன் நோக்கத்தை விளக்குக.

Marks | You may make notes in this space.

**Text 5** Click here

5. Referring to the text, complete the following radio program table. **6**

கேட்ட உரைப்பகுதியில் இருந்து வானொலி நிகழ்ச்சிகள் தொடர்பான அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| Health programs<br>ஆரோக்கியம் தொடர்பான நிகழ்ச்சிகள். | Children's programs<br>சிறுவர் நிகழ்ச்சிகள் | Literary programs<br>இலக்கிய நிகழ்ச்சிகள். |
|---|---|---|
| • ______<br>______<br>• ______<br>______ | • ______<br>______<br>• ______<br>______ | • ______<br>______<br>• ______<br>______ |

**End of Section 1**

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2004 PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

### Section 2: Reading and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 15 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in blue or black ink or ball-point pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2004*

**Part A** (Questions 6–7)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and/or specific aspects of texts, by, for example, comparing, contrasting, summarising, or evaluating, and convey the information accurately and appropriately.*

---

6. Read the text and then answer in ENGLISH the questions that follow.

**-------**இவற்றைவிட, சஞ்சிகைகள், தபாலிலிடுதல், சுவரொட்டிகள் மூலமும், இக்காலத்தில் அதிகம் பிரபல்யமடைந்துள்ள இணையத்தளங்கள் மூலமும் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

விளம்பரங்கள் நன்மையையே அதிகம் விளைவிக்கின்றன என்பது தெட்டத் தெளிவானது. விளம்பரங்களுக்கான செலவை நுகர்வோரே அதாவது விலைகொடுத்து வாங்குவோரே மறைமுகமாக வழங்குவதனால், விலை உயர்வதாக எதிரணி நண்பர் கூறினார். விளம்பரத்தின் மூலம் உற்பத்தி பெருகி அதன்மூலம் செலவு குறைந்து விலை மலியும் என்பதே உண்மையாகும். அதேசமயம் நுகர்வோரும் தரமான பொருட்களை வாங்கக் கூடியதாக உள்ளது என்பதையும் இவர்கள் மறந்து விடுகிறார்கள்.

பத்திரிகையில் விளம்பரங்கள் அதிக இடம் பிடிக்கின்றன என்று குறை கூறுபவர்கள், விளம்பரங்களின்றேல் பத்திரிகைகள் பல மாயமாக மறைந்து போய்விடும் என்பதையும், மற்றைய பத்திரிகைகள் பலமடங்கு விலையிலேயே விற்கப்படும் என்பதையும் அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

கம்பனிகள் விளம்பரத்துக்காக வானொலி தொலைக்காட்சிகளுக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுவதைவிட நாட்காட்டிகள், திறப்புக்கோர்வைகள், விளையாட்டுப் பொருட்கள், போன்ற அன்றாடம் தேவையான பொருட்களைத் தங்கள் பெயரிட்டு அன்பளிப்பாக வழங்கலாம் என்ற தனது கருத்தை வெளியிட்டார் எதிரணி நண்பர். தாம் இலவசமாகப் பொழுது போக்கவும் படங்கள் பார்க்கவும், விளையாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்கவும் பார்க்கவும், வானொலியும் தொலைக்காட்சியும் நின்று நிலைபெறுவது விளம்பரங்களால் மட்டுமே என்பதை இவர்கள் அறியாதிருப்பது கவலையாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்று இவற்றைவிட விளம்பரஞ் செய்தலே பெரியதொரு தொழிலாக வளர்ச்சி பெற்றுள்ளதுடன், புதிய பொருட்கள் சேவைகள் அல்லது ஆலோசனைகளை அறிமுகஞ் செய்தும், முன்னரே உள்ளனவற்றை மேலும் வாங்கத் தூண்டியும், நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு விளம்பரங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன என்பதை வற்புறுத்திக்கூறி எனது உரையை நிறைவுசெய்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

QUESTIONS

**Marks**

(a) This is an extract from a debate. What is the issue being debated? **1**

(b) List the points raised. **6**

For

•
•
•
•

Against

•
•

(c) What alternative means of promoting products is suggested to avoid spending a lot of money on radio and television advertising? **1**

(d) How does the speaker try to convince the audience? Provide examples of expressions from the text. **2**

•
•

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

இளம் வயது வாலிபரான சுரேஷ் ஜோக்கிம் தனது உன்னத முயற்சியால் பல உலக சாதனைகளைப் படைத்தும், பல உலக சாதனைகளை முறியடித்தும் இந்த நூற்றாண்டில் இணையற்ற வீரனாக விளங்குகிறார். அவர் ஒரு தமிழ் மகன் என்பது உலகத் தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

"நான் பிறந்த நாட்டில் மக்கள் பெற்ற துன்பங்கள், குறிப்பாக சிறுவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் காரணமாக, பணம் சேகரித்து வசதியற்ற ஏழைச்சிறார்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் எனக்குச் சிறுவயதிலேயே ஏற்பட்டது" என்று கூறுகிறார் சுரேஷ். அதற்கான வழியை அவர் தேடிக்கொண்டிருந்தார்.

அன்னை திரேசாவின் அர்ப்பணிப்பால் கவரப்பெற்று, தனது முயற்சியில் மேலும் உந்தப்பெற்ற சுரேஷ் சமூகசேவைகளுக்கு நிதி திரட்ட வழிதெரியாது தவித்தார். தனக்கு எதிலும் சிறப்பான ஆற்றல் இல்லை, தான் என்ன செய்யலாம்? என்று சிந்தனையில் இருந்தார். இச்சந்தர்ப்பத்தில்தான் அவருக்குப் பிறந்த நாள் பரிசாக நண்பர் ஒருவரால் அன்பளிப்புச் செய்யப்பெற்ற கின்னஸ் உலக சாதனைப் புத்தகம் கிடைத்தது. அப்புத்தகத்தை வாசிக்க வாசிக்க அவருக்குப் புதிய எண்ணங்கள் பிறந்தன. நிதிசேகரிக்க வழியொன்றைக் கண்டுகொண்டார்.

இவர் தனது உன்னத இலட்சியம் தொடர சொந்த தர்ம அமைப்பு ஒன்றையும் நிறுவினார். அது 'உலகில் துன்பப்படும் சிறுவர்களுக்கு உதவும் நிதியம்' என அழைக்கப்படும். இது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பெற்ற ஒரு தர்ம நிறுவனம் ஆகும்.

கின்னஸ் புத்தகத்தில் தன் பெயரை இருபத்து மூன்று முறை பதிவு செய்திருக்கிற சுரேஷ், மற்றுமொரு சாதனைக்காக சென்னை ஸ்பென்ஸர் பிளாசாவில் பல நூறு ஆதரவாளர்கள் முன்னிலையில் தனியாளாகத் தொடர்ந்து நாற்பத்து மூன்று மணிநேரம் ஆடிப்பாடினார்.

முதன் முறையாக சாதனை ஒன்றைப் படைக்கும் நோக்கில், ஒற்றைக்காலில் நின்றபோது, இரண்டரை மணித்தியாலங்களில் மயக்கமுற்றுக் கீழே விழுந்து விட்டார். இதனைத் தொடர்ந்து பலமாதங்களாகப் பயிற்சி செய்த பின்னர் தொடர்ச்சியாக 45 மணித்தியாலங்கள் ஒற்றைக்காலில் நின்றதன் மூலமாக, 33 மணித்தியாலங்கள் நின்று முன்னர் ஒருவர் செய்த சாதனையை முறியடித்தார்.

1997ம் ஆண்டிலிருந்து அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் வாழ்ந்து வரும் சுரேஷிற்கு அன்றாட வேலையே சாதனை செய்வதுதான். அவுஸ்திரேலியா வாழ் மக்கள் காட்டிய அமோக ஆதரவாலும் அவரின் தனிப்பட்ட கடின உழைப்பாலும் அவுஸ்திரேலியா மண்ணில் பல சாதனைகளைப் படைத்திருக்கிறார். இதன்மூலம் உலகின் அதிக சாதனைகளைப் படைத்த 2வது உலக சாதனை வீரன் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளார்.

உலக சாதனைகளைப் பற்றிய பூரண அறிவோ அல்லது கின்னஸ் பற்றிய விதிமுறைகளோ தெரியாத தனது பத்தாவது வயதில் இவர் தொடர்ச்சியாக 21 மணித்தியாலங்கள் வவுனியா முற்றவெளி விளையாட்டரங்கில் துள்ளல் நடனம் ஆடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு முடிவதற்குள் அதாவது நத்தார் தினத்தன்று ஜெருசலம் நகரிலிருந்து உலக சமாதான விளக்கை ஏந்தியபடி இடைவிடாது உலகைச் சுற்றித் தனிமனிதனாக 30,000 கி. மீ தூரத்தை ஓடி முடிக்க வேண்டும் என்ற தீவிர ஆவல் அவர் மனதில் இருக்கிறது.

தனது சாதனைகளை யாராவது முறியடிக்கும்போது, அல்லது குறிப்பிட்ட குறிக்கோளைத் தான் அடையமுடியாதபோது "இது எனது முயற்சியின் ஒரு சிறு தடங்கலே தவிர தடையாகி விடாது" என்று தெரிவிப்பார்.

"சாதனைகள் செய்யும்போது எனக்கு ஏற்படும் உடல்வலியும் மனச் சோர்வும் மக்கள் தரும் அமோக ஆதரவாலும் மிகப்பெரிய அளவில் கிடைக்கும் தர்மநிதியாலும் புதிய கைகால்கள் கிடைத்த உணர்வு ஏற்பட்டு, மேலும் உற்சாகத்தை உண்டுபண்ணுகின்றன" என்று இயம்பிவரும் சுரேஷ், அடுத்த ஐந்து வருடங்களில் 60 இற்கு மேற்பட்ட உலக சாதனைகளைப் படைத்து, தானே 'உலகில் அதிக சாதனைகளை முறியடித்தவன்' என்று கின்னஸ் புத்தகத்தில் பதியப்படுவதன் மூலம், தனது உன்னத நோக்கை அடைவேன் என்று உறுதியாகக் கூறுகிறார்

QUESTIONS

**Marks**

(a) Suresh was inspired by **2**

- 

- 

(b) Name two of Suresh's achievements. **2**

- 

- 

(c) Provide an example of Suresh's determination. **1**

(d) Discuss the proverb '*vilaiyum payirai mulayil therium*' (the quality of yield can be predicted from the seedlings) with reference to the text. **3**

(e) What are two future challenges for Suresh? **2**

- 

- 

**Part B** (Question 8)
(10 marks)

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of a text by identifying, analysing, and responding to information;*
- *convey information coherently (structure, sequence, accuracy and variety of vocabulary and sentence structure) and appropriately (relevance, use of conventions of the text type).*

8. Read the text and then answer the question in TAMIL on page 7.

<u>மாணவர் பரிமாற்றுத் திட்டம்–மாணவர் பராமரிப்பில் பங்குபற்றுவோருக்கான விண்ணப்பம்</u>

அவுஸ்திரேலியத் தமிழ்ப்பாடசாலைகள் ஒருங்கிணைப்புக் குழுவினால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்படி முதலில் ஈழத்திலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் மூன்று மாதங்களுக்கு அவுஸ்திரேலியாவில் தங்கவைக்கப்படுவார்கள். அவுஸ்திரேலியத் தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்கள், ஈழத்தில் அல்லது தமிழ்நாட்டில் இதே காலப்பகுதிக்குத் தங்கவைக்கப்படுவார்கள்.

பரிமாற்றுத்திட்டத்தில் பங்குபற்றுவதற்காக அவுஸ்திரேலியா வரும் மாணவர்கள், தாம் இங்கு தங்கியுள்ள காலத்தில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவார்கள்.

- தாம் தங்கியுள்ள மாநிலத்தில் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து கொள்ளுதல்.
- தாம் வாழும் மாநிலத்தில் உள்ள பாடசாலைக்குச் செல்வதன் மூலம், அங்கு நடைமுறைப்படுத்தப்படும் கல்விமுறையிலுள்ள பொதுவானதும் சிறப்பானதுமான அம்சங்களை அறிந்துகொள்ளல்.
- உள்ளரங்க மற்றும் மைதான விளையாட்டுக்களைத் தெரிந்து கொள்ளல்.
- நகர்ப்புற, நாட்டுப்புற வாழ்கைமுறைகளின் வேறுபாடுகளை அறிந்துகொள்ளல்.
- உள்ளூரில் காண்பிக்கப்படும் திரைப்படங்கள், அரங்கேறும் கலை கலாச்சார நிகழ்வுகள் பற்றி அறிதல்.
- குடும்பவாழ்க்கைமுறை முதலிய சமூக அம்சங்கள் பற்றித் தெரிந்து கொள்ளல்.

மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக, அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து வரப்படும் மாணவர்களில் ஒருவரை மூன்று மாதகாலத்திற்குத் தங்கள் வீட்டில் நல்ல தங்குமிட வசதிகள் கொடுத்துப் பராமரிக்க விரும்புகின்ற தமிழ்க் குடும்பங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அவுஸ்திரேலியாவில் தமிழ் கற்கும் மாணவர்களின் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் குடும்பங்கள், மாணவர்கள் அழைத்து வரப்படும் நோக்கத்தில் உச்சப்பயனை அடையும் வகையில், தாம் அவர்களை எவ்வாறு பராமரிப்பார்கள் என்பதை விளக்கி, ஒருங்கிணைப்புச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதுமாறு கேட்கப்படுகிறார்கள்.

அனுப்பவேண்டிய விலாசம் **34** யூனியன் வீதி, எப்பிங்.

QUESTION

On behalf of your parents, write a formal letter providing your family information in 150–200 words. Include your capacity to help students achieve the educational and cultural goals of the program.

உங்கள் குடும்பத்தின் சார்பாக விண்ணப்பக் கடிதம் ஒன்றை **150–200** சொற்களில் எழுதவும். அக்கடிதத்தில் இத்திட்டத்தின் கல்வி கலாச்சாரக் குறிக்கோள்களை பரிமாற்றுத் திட்ட மாணவர் அடைய உதவும் வகையில், உங்கள் குடும்பம் கையாள உள்ள வழிவகைகளைக் குறிப்பிடவும்.

*Do not remove this page from the question booklet.*

Student/Registration Number

Centre Number

Tamil
Continuers Level

Question 8

**End of Section 2**

| Student/Registration Number | | | | | | | | | | | | Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**2004 Public Examination**

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (15 marks)

**Instructions to Students**

1. Allow approximately 45 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2004*

**Section 3** (Questions 9–12)
(15 marks)

*When judging performance in this section, the examiner(s) will take into account the extent to which the student demonstrates:*

- *relevance and depth of treatment of ideas, information, or opinions;*
- *accuracy and range of vocabulary and sentence structures;*
- *the capacity to structure and sequence response and capacity to use conventions of the text type.*

Answer ONE question from this section in 200–250 words in TAMIL.

9. Write an article for a magazine, to be published in a Tamil-speaking country, persuading readers to spend a holiday in Australia.

   தங்கள் விடுமுறைக் காலத்தை அவுஸ்திரேலியாவில் கழிக்க வாசகர்களைத் தூண்டும் வகையில் தமிழ் பேசும் நாடொன்றின் சஞ்சிகையில் வெளியிடுவதற்காக ஒருகட்டுரையைத் தயாரிக்குக.

10. Write an imaginative story with the main character as a woman who is straightforward, brave and strong-willed.

    நேர்மையும் வீரமும் துணிவும் கொண்ட ஒரு பெண்ணைப் பிரதான பாத்திரமாகக் கொண்டு கற்பனைக்கதை ஒன்றை எழுதுக.

11. Your friend from another state is thinking of living away from home and asks for your advice. Write a letter explaining the advantages and disadvantages of living away from home to help him/her to evaluate the situation.

    அயல் மாநிலத்தில் உள்ள உமது நண்பரொருவர், குடும்பத்தை விலகி வாழ்வது பற்றி உமது ஆலோசனையை நாடுகிறார். அவரது நிலையில், குடும்பத்தை விலகி வாழ்தலில் உள்ள நன்மை தீமைகளை அவர் மதிப்பீடு செய்ய உதவும் வகையில் கடிதம் ஒன்றை எழுதுக.

12. Your grandmother recently came from a Tamil-speaking country to live in your home. She does not approve of your behaviour and you do not like her interference. Write entries in your diary over a number of days expressing your dissatisfaction with this matter.

    உமது பாட்டி அண்மையில் தமிழ் பேசும் நாடொன்றில் இருந்து வந்து உமது குடும்பத்தினருடன் வாழ்கிறார். உமது நடத்தைகளில் சிலவற்றை அவர் பொருத்தமற்றது என்று முரண்படுகிறார். பாட்டி உமது விடயங்களில் தலையிடுவதாக நீர் கருதுகிறீர். இதன்மூலம் வெவ்வேறு நாட்களில் உமக்கு ஏற்பட்ட திருப்தியின்மை பற்றிய குறிப்புக்களை உமது நாட்குறிப்பேட்டில் எழுதுக.

You may make notes in this space.

Question Number:

**End of Section 3**